சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

04-04-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : பகுத்தறிவு : கோவூர் நினைவு உரையாடல்**

**தொடக்கவுரையாடல் : தாரக**

**கோவூர் பற்றிய குறிப்புக்கள்**

இவர், கேரளாவில் திருவள்ளா என்னுமிடத்தில் 1898ஆம் ஆண்டு ஏப்பிரல் 10ஆம் நாள், மார் தொம்மா சிரியன் திருச்சபையின் தலைவரான கோவூர் ஈய்ப்பெ தொம்மா காத்தனாரின் மகனாகப் பிறந்தார். கொல்கத்தாவில் கல்வி கற்று பின்னர் கேரளாவில் சில காலம் கல்லூரி உதவி விரிவுரையாளராக இருந்த கோவூர், தன் வாழ்க்கையின் பெரும்பாலான காலத்தைக் கொழும்பில் கழித்தார். இலங்கையில் பல பாடசாலைகளில் தாவரவியல் ஆசிரியராகப் பணிபுரிந்து கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியிலிருந்து 1959 இல் பணி ஓய்வு பெற்றார். கல்லூரிப் பணி ஓய்வு பெற்ற பின்னரே, ஆவிகள் அதன்களின் விந்தை நிகழ்வுகள் தொடர்பான தம் வாழ்நாள் ஆராய்ச்சியைப் பற்றிப் பேசவும் எழுதவும் தொடங்கினார். இறுதிவரை அவர் தீவிர பகுத்தறிவாளராகவே இருந்தார்.

தான் கடவுளின் அவதாரம் அல்லது தெய்வீக ஆற்றல் உள்ள மகான் என்று சொல்லும் அனைவருமே பொய்யர்கள், ஏமாற்றுவாதிகள் என்பதை நிறுவுவதே கோவூரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. Rationalist Association of Sri Lanka என்னும் சங்கத்தைத் தோற்றுவித்து, வெகு காலம் அதன் தலைவராக இருந்தார்.

ஆவி, பிசாசு தொடர்பாகக் கூறப்பட்ட எல்லாவகை விந்தை நிகழ்வுகளையும் அரை நூற்றாண்டுக்கும் மேல் முழுவதுமாக ஆராய்ந்தவர்.அத்தகைய நிகழ்வுகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் பின்னால், நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டதான உண்மை ஏதும் சிறிதும் இல்லை என்று முடிவு கண்டவர் கோவூர். ஆவி, பேய் ஆகியவை தொடர்பான ஆற்றல்கள் பெற்றுள்ளதாகக் கூறுகின்ற எல்லாரும் ஒன்று ஏமாற்றுக்காரர்களாக இருக்க வேண்டும் அல்லது மூளைக்கோளாறோ மனநோயோ கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவரின் உறுதியான கருத்தாகும்.

அவை தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டாருள், அத்துறைப் பணிக்காக மின்னசோட்டா மெய்யறிவு நிலையம் (இப்போது இந்நிறுவனம் செயல்பாட்டில் இல்லை) கவுரவ முனைவர் பட்டம் வழங்கியது இத்தகைய பட்டங்களை முதலில் இருந்தே எதிர்த்து வந்த கோவூர், முனைவர் பட்டத்தைத் திருப்பி அனுப்பினார்.

> கோவூரின் காலத்தில் பகுத்தறிவு என்பது மதம் சார்ந்த மூடநம்பிக்கைக்கு எதிராகப் போடுவதாக இருந்தது. ஆனால் இன்றைய காலத்தில் வெறுமனே அதுமட்டும் பகுத்தறிவாக பார்க்கப்படமுடியாது. பகுத்தறிவாளனானவர் மத மூடநம்பிக்கையைத் தாண்டியும் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மூடநம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராட வேண்டியவராகிறார்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட வியக்கத்தக்க ஆற்றல்களைப் பெற்றுள்ளதாகக் கூறும், உலகின் எந்தப் பகுதியிலுள்ள எவரும், மோசடியின்றி செய்முறைகள் மூலம், அவர்கள் திறமைகளை மெய்ப்பித்துக் காட்ட முடியுமானால், அவருக்கு சிறீலங்க ரூபாய் ஒரு லட்சம் பரிசளிக்க அவர் தயாராக இருப்பதாக அறைகூவினார். தான் இறக்கும் வரையில், அல்லது இதன் தொடர்பான முதல் வெற்றியாளரைக் காணும் வரையில், இந்த அறிவிப்பு செயற்பாட்டிலிருக்கும் என்றும் அறிவித்தார். இறுதி வரையில் எவருமே அப்பரிசை வெல்லவில்லை.

"எனக்கு சாவைக் கண்டு அச்சமில்லை; எனவே, என்னை புதைக்க வேண்டாம்" என்று தன் உயிலில் எழுதி வைத்த கோவூர், தன் கண்களை ஒரு கண் வங்கிக்குத் தானமாக அளித்தார்; தன் உடலை மருத்துவக்கல்லூரிக்கு ஆய்வுக்காகவும் தன் எலும்புக்கூடு தற்சுட்டன் கல்லூரியின் அறிவியல் ஆய்வகத்திற்கு அளிக்கப்பட வேண்டும் என்று எழுதியிருந்தார்.

கோவூரின் நூல்களிலுள்ள நிகழ்வாய்வு (case study) உண்மை நிகழ்ச்சிகளை பல்வேறு நாடுகளில் பல பத்திரிகைகளும், செய்தித் தாள்களும் தொடர்ச்சியாக வெளியிட்டன.

அக்கதைகளுள் ஒன்று, மலையாளம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. அவருடைய நூலின் மற்றொரு உண்மைக்கதை, 'நம்பிக்கை' என்ற பெயரில் தமிழ் நாடகமாகப் பலமுறை அரங்கு நிறைந்த அவையோர் முன் நடித்துக் காட்டப் பட்டது.

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**மாற்று அரசியல் கணினி விளையாட்டுக்கள்**
மு. மயூரன் | 11-04-2013

**R2P: Who's right to protect**
தெ. ஞா. மீநிலங்கோ | 18-04-2013



**கலீல் ஜிப்ரான்**

கலீல் ஜிப்ரான் (Khalil Gibran, xaˈliːl ʒi ˈbrɑːn) என்று அழைக்கப்பெற்ற ஜிப்ரான் கலீல் ஜிப்ரான், , ஜனவரி 6, 1883 - ஏப்ரல் 10, 1931), ஒரு லெபனானிய, அமெரிக்க ஓவியர், கவிஞர் மற்றும் எழுத்தாளர் ஆவார். பஷ்றி நகரில் பிறந்து, சிறுவயதில் 1895 இல் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு அவரது தாய், சகோதரி, சகோதரன் ஆகியோருடன் குடிபெயர்ந்து, அங்கேயே கலை கற்று தன்னுடைய இலக்கியப் பணியை துவங்கினார்.

அவர் எழுதிய புத்தகங்கள் உலக அளவில் விற்பனையில் மூன்றாம் இடம் வகிக்கின்றன.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## இலங்கையில் பகுத்தறிவு இயக்கம்

முன்பக்கத் தொடர்ச்சி..

### இலங்கை பகுத்தறிவாளர் சங்கம் பற்றிய குறிப்புகள்

கோவூரால் தொடங்கப்பட்ட இலங்கைப் பகுத்தறிவாளர் சங்கம் அவரது காலத்தில் மாதாந்தக் கூட்டங்களை நடத்திவந்தது. அவரது மறைவுக்குப்பின்னர் சிலகாலம் செயற்பாடின்றி இருந்தது. அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டளவில் சிலரது முயற்சியால் சங்கத்தின் செயற்பாடுகள் மீளத்தொடங்குகின்றன. மறுபடியும் மாதாந்தக் கூட்டங்கள் நடக்கின்றன.

### பகுத்தறிவு பற்றிய குறிப்புக்கள்

எப்பொழுதும் மூடநம்பிக்கைக்கு எதிராக போராடுபவர்களை பகுத்தறிவாளர் என்போம். கோவூரின் காலத்தில் பகுத்தறிவு என்பது மதம் சார்ந்த மூடநம்பிக்கைக்கு எதிராகப் போடுவதாக இருந்தது.
ஆனால் இன்றைய காலத்தில் வெறுமனே அதுமட்டும் பகுத்தறிவாக பார்க்கப்படமுடியாது. பகுத்தறிவாளனானவர் மத மூடநம்பிக்கையைத் தாண்டியும் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மூடநம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராட வேண்டியவராகிறார். இலங்கையின் முன்னைய வரலாற்றையும் தற்போதய சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ளும்போது இது நமது கடமையாகிறது. மதச் சார்பின்மை என்பது முக்கியமான விடயமாக உள்ளது. ஏனெனில் இலங்கையைப் பொருத்தவரையில் சமூக, கலாசார, அரசியல் நடவடிக்கைகளில் மதத்தின் ஆதிக்கம் அதிகம்.

மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டிய இடங்களே அவற்றை வளர்க்க உதவியாய் உள்ளன. உதாரணமாக தற்போதய இலங்கையின் பாடசாலைகள். மூடநம்பிக்கைகள் அங்கு சிறுவர்கள் மனதில் விதைக்கப்படுகிறது. அரசியல் மட்டத்தில் காணப்படும் சில மூடநம்பிக்கையோடு கூடிய ஒப்பீடுகளாக, காந்தியை தர்மபாலவுடனும், நேருவை SWDR பண்டாரநாயக்கவுடனும் ஒப்பிடுவதைப் பார்க்கலாம்.

பௌத்தம் என்பது ஒரு பகுத்தறிவுரீதியான மதமாக பார்க்கப்படுகிறது. ஆனால் பௌத்தத்தை பெரும்பான்மை மதமாகக் கொண்ட இலங்கையில் அதிகளவில் மூடநம்பிக்கை காணப்படுகிறது. அதிலும் ஒப்பீட்டு அளவில் பௌத்தர்களிடையே மூடநம்பிக்கையும் பெருந்தேசியவாதமும் அதிகமாக உள்ளது. அது ஏன்?

1. புத்தர் பௌத்தத்தை ஒரு பகுத்தறிவு மார்க்கமாகவே கட்டியெழுப்பினார். ஆனால் அதன் பெரும்பான்மை கருத்துக்கள் மக்கள் மத்தியில் சில தவறான நோக்கங்களுக்காக உரிய முறையில் பரப்பப்படாமல் உள்ளது. காரணம் இன்றைய நிலையில் யாரின் கையில் பௌத்தத்தின் கட்டுப்பாடு உள்ளதோ அவர்களின் கருத்தியலே பௌத்தமாகத் திணிக்கப்படுகிறது.

2. பௌத்தம் இலங்கையில் பரவியபோது அது ஏற்கனவே மக்கள் மத்தியில் நிலவிவந்த பல நடைமுறைகளுடன் சமரசம் செய்தவாறே பரப்பப்பட்டது. உதாரணமாக நூல்கட்டுதல், பேயோட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு பகுத்தறிவு இயக்கம் மத மூடநம்பிக்கையைத் தாண்டியும் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மூடநம்பிக்கைகளையும் எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலையில் அது எவ்வாறு அரசியலற்ற இயக்கமாக இருக்கமுடியும்?

இலங்கை பகுத்தறிவாளர் சங்கத்தைப் பொருத்தவரையில் சங்கத்தின் பெரும்பாலான அங்கத்தவர்கள் இடதுசாரிகளாக இல்லாத போதிலும் சங்கம் பல சந்தர்ப்பத்தில் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்து வேலை செய்துகொண்டிருக்கிறது. அரசியல் ரீதியாக முற்போக்கான வேலைகளை பகுத்தறிவாளர் சங்கம் ஆதரிக்கிறது. இணைந்து வேலை செய்யவும் பின் நிற்பதில்லை.

## டாக்டர்.கோவூரின் சவால்கள்:



1. முத்திரையிடப்பட்டுள்ள உறையின் உள்ளே ஒரு கரன்சி நோட்டின் வரிசை எண்ணைப் படித்துக் காட்டுக.
2. ஒரு கரன்சி நோட்டினைப் போன்று மற்றொரு கரன்சி நோட்டினை உண்டாக்கிக் காட்டுக.
3. கடவுள் துணையால் பாதத்தில் எவ்விதப் புண்ணோ, கொப்பளமோ ஏற்படாமல் அரை நிமிட நேரம் எரியும் தணலில் அசையாமல் நின்று காட்டுக.
4. நான் கேட்கும் ஒரு பொருளை ஒன்றுமில்லாமல் (சூனியத்தில்- வெற்றிடத்தில்) இருந்து உண்டாக்கிக் காட்டுக.
5. மனோபலத்தைப் பயன்படுத்தி ஒரு திடப் பொருளை அசைத்தோ, வளைத்தோ காட்டுக.
6. தொலைவில் உணர்தல் ஆற்றலைப் பயன்படுத்தி மற்றொருவன் நினைப்பதை வெளியில் எடுத்துக்கூறுக.
7. பிரார்த்தனை, அத்மபலம், புனித தீர்த்தம், விபூதி, ஆசீர் வாதம் இவை போன்றவற்றின் மூலம் துண்டிக்கப்பட்ட ஓர் உடல் உறுப்பை ஓர் அங்குல நீளம் வளரச் செய்து காட்டுக.
8. யோக சக்தியால் ஆகாயத்தில் எழுப்பிக் காட்டுதல் அல்லது மிதப்பது போல் செய்து காட்டுக.
9. யோக சக்தியால் அய்ந்தே மணிதுளி அய்ந்து நிமிடம் இதயத் துடிப்பை நிறுத்திக் காட்டுக.
10. நீரில் நடந்து காட்டுக.
11. உன் உடலை ஓர் இடத்தில் இருக்க வைத்துவிட்டு வேறு ஓர் இடத்தில் இவ்வுடலை உருவாக்கிக் காட்டுக.
12. யோக சக்தியால் அரை மணி நேரம் சுவாசிப்பதை நிறுத்திக் காட்டுக.
13. ஆழ்நிலை தியானத்தாலோ, வேறு எவ்வகை தியானத்தாலே படைப்பாற்றல் மிக்க நுண்ணறிவையோ, பேரறிவையோ பெருக்கிக் காட்டுக.
14. நிழற்படம் பிடிப்பதற்காக ஓர் ஆவி அல்லது ஓர் பேயினை நேரில் தோன்றச் செய்க.
15. நிழற்படம் பிடிக்கும்போது படத்தாளில் பதிவாகாதவாறு உன்னை மறைத்துக் காட்டுக.
16. மறுபிறவியின் விளைவாலோ, நல்ல அல்லது கெட்ட ஆவிபிடித்து இருப்பதாலோ உனக்குத் தெரியாத மொழியினைப் பேசிக்காட்டுக.
17.பூட்டப்பட்ட அறையிலிருந்து தெய்வீக ஆற்றலால் வெளியே வந்த காட்டுக.
18. மறைத்து வைக்கப்பட்டுள்ள ஒரு பொருளை கண்டுபித்துக் காட்டுக.
19. வெறும் நீரை பெட்ரோலாகவோ, ஒயினாகவோ மாற்றிக் காட்டுக.
20. ஒயினை ரத்தமாக மாற்றிக் காட்டுக.

### மாற்று அரசியல் கணினி விளையாட்டுக்கள் (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

* கணினி விளையாட்டுக்கள் பற்றிய அறிமுகம்
* கணினி விளையாட்டுக்களின் பரிணாமம்
* கணினி விளையாட்டுக்களின் அரசியல்
* கல்விசார் கணினி விளையாட்டுக்கள்
* மாற்று அரசியல் கணினி விளையாட்டுக்களின் தேவை
* மாற்று அரசியல் கணினி விளையாட்டுக்களை உருவாக்குவதற்கான முயற்சிகள்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA